NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p1
**Date:** 7 August 2020

## சிங்கப்பூரர்கள், நிரந்தரவாசிகளுக்கான கட்டண முறையில் மாற்றம்

# கொவிட்-19 மருத்துவச் செலவுகளுக்கு மானியம்

வெளிநாட்டுப் பயணங்களுக்கு அனுமதிக்கப்பட்ட சிங்கப்பூரர்களும் நிரந்தரவாசிகளும் நாடு திரும்பிய 14 நாட்களில் கொவிட்-19 கிருமித்தொற்று உறுதி செய்யப்பட்டால் மருத்துவமனையின் சிகிச்சைக் கட்டணங்களை அவர்களே செலுத்த வேண்டும்.

இன்று (ஆகஸ்ட் 7) முதல் அந்தப் புதிய நடைமுறை அறிமுகம் காணும் என சுகாதார அமைச்சர் கான் கிம் யோங் தெரிவித்தார்.

இருந்தபோதிலும் அக்கட்டணங்களை ஈடுகட்ட மெடிஷீல்ட் லைஃப், ஒருங்கிணைந்த காப்புறுதித் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் அவர்கள் அரசாங்க மானியங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் கட்டணங்களின் எஞ்சிய பகுதிகளை அவர்கள் செலுத்த வேண்டியிருக்கும் என்றும் திரு கான் கூறினார்.

நீண்டகால வருகைக்கான அனுமதி அட்டை வைத்திருப்போரும் இதே போன்ற மருத்துவக் கட்டண உதவிகளைப் பெற முடியும். அனுமதிக்கப்பட்ட பயண ஏற்பாடுகளின்கீழ் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்ட அவர்கள், நாடு திரும்பிய பின்னர் கொவிட்-19 தொற்றுக்கான மருத்துவச் செலவுகளுக்கு வெளிநாட்டு ஊழியர் காப்பீட்டுத் திட்டங்களின்வழி நிதி ஏற்பாடுகளைச் செய்துகொள்ள முடியும்.

அனுமதிக்கப்பட்ட பயண ஏற்பாடுகளில் மலேசியா, சீனா போன்றவற்றுடனான இருதரப்பு ஏற்பாடுகளும் அடங்கும். காணொளி வழியாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அமைச்சர் கான் இந்த கட்டண முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றத்தை அறிவித்தார்.

இதுவரையிலான ஏற்பாட்டின்படி, கொவிட்-19 கிருமித்தொற்றுக்காக சிகிச்சை பெறும் சிங்கப்பூரர்கள், நிரந்தரவாசிகள் மற்றும் நீண்டகால அனுமதி அட்டைதாரர்களின் உள்நோயாளி மருத்துவக் கட்டணங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. நடப்பில் இருக்கும் பயண ஆலோசனைகளை மீறுவோர் தங்களது மருத்துவக் கட்டணங்களுக்குப் பொறுப்பாகும் நிலை இருந்தது.

மாற்றம் குறித்து விளக்கிய திரு கான், “வெவ்வேறு திட்டங்கள் மூலம் அத்தியாவசியப் பயணங்களை நாம் படிப்படியாக அனுமதிக்கும் வேளையில் பயணிகளுக்கான கொவிட்-19 சிகிச்சைக்குரிய கட்டணக் கொள்கையை மறுஆய்வு செய்தோம்,” என்றார். நீண்டகால வருகைக்கான அட்டை வைத்திருப்போரும் பயணிகளும் சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்கும் இடையிலான எல்லைதாண்டிய அத்தியாவசிய வர்த்தகப் பயணங்களுக்கும் அதிகாரத்துவ வருகைக்கும் அனுமதிக்கப்பட உள்ளனர். அதற்கு அனுமதி கோருவதற்கான விண்ணப்பங்களை வரும் திங்கட்கிழமை முதல் சமர்ப்பிக்கலாம். ஜூன் 8ஆம் தேதி சீனாவுடன் விரைவுத்தட ஒப்பந்தத்தை ஏற்படுத்தி சிங்கப்பூர் அதன் எல்லைகளைப் படிப்படியாகத் திறந்தது. இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் அதிகாரத்துவப் பயணங்களை மீண்டும் தொடங்க அந்த ஒப்பந்தம் அனுமதித்தது.

அமைச்சர் மேலும் கூறுகையில், அனுமதிக்கப்பட்ட பயண ஏற்பாடுகளின்கீழ் பயணம் செய்யாவிட்டாலும் பயண ஆலோசனைகளை மீறி பயணத்தை மேற்கொள்வோர் கொவிட்-19 உறுதி செய்யப்பட்டால் உள்நோயாளிக்கான மருத்துவக் கட்டணங்களை அவர்களே முழுமையாகச் செலுத்த வேண்டி வரும் என்றார்.

குறுகியகால வருகை அட்டை வைத்திருப்போர் அனுமதிக்கப்பட்ட பயண ஏற்பாடுகளின்படி சிங்கப்பூருக்குள் வந்த 14 நாளில் கிருமித்தொற்று உறுதி செய்யப்படும் பட்சத்தில் அதற்கான மருத்துவச் செலவுகளை அவர்களே ஏற்கவேண்டும் என்றும் திரு கான் குறிப்பிட்டார்.

தொடர்பு செய்திகள் - பக்கம் 2

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.